சார்பு நீதிமன்றம், மேலூர்

நாள் 09.10.2025

வா.சா.3 – கண்ணன் S/o. ஆண்டிச்சாமி

OS. No.241/2023

(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)

குறுக்கு விசாரணை :

நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் கார் ஓட்டுநர் ஆவேன். என்னை சாந்தி என்பவர் தான் சாட்சி சொல்ல வரும்படி அழைத்து வந்தார். வாதி சாந்தி என்னுடைய என் பெரியப்பா மகனுடைய மனைவி ஆவார். எனக்கு பிரதிவாதி அழகுதேவியை தெரியும். அவரும் என்னுடைய ஊரைச்சார்ந்தவர் தான். பிரதிவாதிக்கு சுமார் 68 வயது இருக்குமா என்றால் இருக்கும். பிரதிவாதிக்கு திருமணம் ஆகவில்லை. 2021ம் ஆண்டு, மாதம் தேதி நினைவில்லை அழகுதேவி, சாந்தியிடம் வந்து முதலில் பணம்கேட்டதாக கூறிவிட்டு சாட்சி மீண்டும் இடத்தின் பேரில் கிரைய அக்ரிமெண்ட் போட்டு பணம் கேட்டதாக குறிப்பிடுகிறார். 1 லட்சம் ரூபாய் அட்வான்ஸ் தொகையாக அதே நாளில் கொடுக்கப்பட்டது. என்ன அவசர தேவைக்காக பணம் கேட்டார் என்று தெரியுமா என்றால் தெரியாது. என்ன காரணத்திற்காக அன்றைய தினம் வாதி வீட்டிற்கு சென்றிருந்தேன் என்று என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். பணம் கேட்ட விபரம் மட்டும் தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அதற்கு முன்பு வாதியும், பிரதிவாதியும் என்ன பேசிகொணட்ோர்கள் என்ற விபரம் தெரியாது. பணம் கொடுக்கும் போது தான் நான் உடன் சென்றிருந்தேன். அன்றைய தினம் 500ரூபாய் தாள்களாக 2 கட்டுகள் கொடுக்கப்பட்டது. எல்லா விபரங்களையும் என்னிடம் பணம் கொடுப்பது சம்பந்தமாக சொன்னார்களா என்றால் சொல்லவில்லை. கிரைய

ஒப்பந்த ஆவணத்தில் நான் சாட்சியாக கையெழுத்திட்டுள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்து எங்குள்ளது என்று தெரியுமா என்றால் தெரியும். சூரக்குண்டில் உள்ள நஞ்சை நிலம் ஆகும். அது புஞ்சை நிலமாக இருந்தால் தவறா என்றால் தவறுதான். பிரதிவாதிக்கு எவ்வாறு வழக்கு சொத்து பாத்தியப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. எங்கள் ஊர் மதுரை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் இருந்து 1 கி.மீ தொலைவு உள்ளே இருககுமா என்றால் இருக்கும். மேற்படி சாலையை அனுசரித்து இருக்கும் இடம் 1 செண்டு, 10 லட்சம் விலை போகும் என்றால் அவ்வளவு போகாது இது சற்று உள்ளே தள்ளி இருக்கிறது. மீதமுள்ள 11000 தற்போது வரை கொடுக்கப்படவில்லை. மேற்படி விபரம் என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2-1/2 ஆண்டு காலத்தில் 11000 ரூபாய் பாக்கி கொடுப்பதற்கு எதற்காக காலஅவகாசம் என்று குறிப்பிட்டு முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. யார், யாரிடம் எத்தனை முறை பணம் கேட்டு, பத்திரம் பதிவு செய்து கொடுக்க கேட்கப்பட்டது என்ற விபரம் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் மேற்படி விபரம் தெரியும் என்று குறிப்பிட்டிருந்தால் தவறா என்றால் தவறு தான். என்ன ஆவணம் வாங்குவதற்காக பிரதிவாதி காலதாமதபடுத்தினார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. யாரிடம் பிரதிவாதி விற்பனை செய்ய வழக்கு சொத்தை முயற்சித்து வருகிறார் என்ற விபரம்தெரியுமா என்றால் தெரியாது. வாதிக்கு தமிழரசன் என்ற மகன் இருக்கிறார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதி, தம்பியின் மகளை திருமணம் முடிக்கும் செலவிற்கு கடனாக தான் வாதியை அணுகி பணம் கடனாக பெற்றார் என்றும், அந்த கடனை பெற்று மாதம் தவறாமல் வட்டி செலுத்திவந்துள்ளார் என்றும், கொரான காலகட்டத்தில் அவரால் தொடர்ந்து வட்டியை சரிவர செலுத்த இயலவில்லை என்றும், அதனால் ஒரு

ஆதரவிற்காக கிரைய ஒப்பந்த ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றும், தற்போது வழக்கு சொத்தின் சந்தை மதிப்பு அதிகரித்துவிட்ட நிலையில் சொத்தை அபகரிக்கவேண்டும் என்று தற்போது கிரைய ஒப்பந்தம் போட்டதாக வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் வாதிக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிப்பதால் என்னுடைய சாட்சியம் ஏற்றுகொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.10.09 18:59:30 +0530

Sub Judge

Melur